**நீநீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உடுமலைப்பேட்டை.**

**முன்னிலை. திருமதி.T.நித்யகலா, பி.காம்., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் நாள் வியாழட்கிழமை

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண். 05/2019**

**in**

**குற்றவியல் பல்வகை மனு எண். 32/2026**

செல்வம் (எ) முத்துசாமி,
த/பெ. கருப்புசாமி,
4/99, காந்திபுரம், கணக்கம்பாளையம்,
உடுமலைப்பேட்டை தாலுக்கா.

...மனுதாரர்/எதிரி

/எதிரி/

சசிக்குமார்,
த/பெ. மனோகரன்,
2, அனுசம் நகர், நாச்சிமுத்து லே அவுட்,
உடுமலைப்பேட்டை தாலுக்கா.

...எதிர்மனுதாரர்/ புகார்தாரர்

இந்த மனுவானது 20.01.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் திரு.C.சிதம்பரசாமி, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.A. வேல்மணி, M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பின் வாதத்தைக் கேட்டறிந்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்த வரை இன்று இந்நீதிமன்றத்தால் வழங்கப்படும்,

**உத்தரவு**

மனுதாரர் இம்மனுவின் அசல் வழக்கினை மீள் திறப்பு செய்ய வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**1. மனுதாரர்/எதிரி தாக்கல் செய்துள்ள மனு கீழ்க்கண்டவாறு :**

(01.01) மனுதாரர் தனது மனுவில் கடந்த 28.09.2022 ஆம் தேதியில் புகார்தாரர் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் 2016–2017 ஆம் வருட

வருமானம் எவ்வளவு என்றாலும் அதற்காக புகார்தாரர் வருமான வரி செலுத்துகிறாரா என்றால் தான் செலுத்துவதாக கூறியதன் பேரில் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை வருமான வரியில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை குறித்து எதிரி தரப்பில் மேற்படி புகார்தாரரை விசாரிக்க வேண்டியுள்ளது என்றும், நீதிமன்றம் மூலமாக அழைத்து விசாரணை செய்வதால் புகார்தாரருக்கு எவ்விதமான நியாயமான ஆட்சேபணை இருக்க வாய்ப்பில்லை என்றும், புகார்தாரர் தரப்பு சாட்சியங்களை நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரணை செய்தால் மட்டுமே உண்மை தன்மை தெரியவரும் என்றும் குறிப்பிட்டு புகார்தாரரை அழைத்து விசாரணை செய்ய இவ்வழக்கை மீள் திறப்பு செய்ய வேண்டி தக்க உத்தரவிடுமாறு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்

**2. எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை கீழ்க்கண்டவாறு :**

(02.01) இம்மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிற மற்ற அனைத்தையும் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர்.

(02.02) இவ்வழக்கானது எதிர்மனுதாரர்/புகார்தாரரால் கடந்த 2019 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு கோப்புக்கு எடுக்கப்பட்டு நாளது தேதி வரை வழக்கு நடைபெற்று வருகிறது என்றும், புகார்தாரர் தனது முதல் விசாரணையை கடந்த 22.08.2019 ஆம் தேதி பதிவு செய்துள்ளார் என்றும், மனுதாரர்/எதிரி தரப்பில் கடந்த 28.09.2022, 13.03.2023, 02.05.2023 ஆகிய தேதிகளில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரி தரப்பில் பல்வேறு சாட்சிகளை விசாரிக்க CMP No.2893/2023 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு இந்நீதிமன்றத்தால் தள்ளபடி செய்யப்பட்டது என்றும், பின்பு எதிரி தரப்பு சாட்சி–1 ஆக விசாரிக்கப்பட்ட எதிரியின் மூலம் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.5 வரை உள்ள ஆவணங்கள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு குறியீடு

செய்யப்பட்டுள்ளது என்றும், எழுத்து மூலமான வாதுரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த சூழ்நிலையில் புகார்தாரரின் 2016-2017 ம் வருட வருமான வரி அறிக்கையை கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

(02.03) மேலும், புகார்தாரரை எதிரி குறுக்கு விசாரணையின் போதே புகார்தாரர் மருத்துவர் என்றும் அவரது மனைவியும் மருத்துவர் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என்றும், புகார்தாரரானவர் தான் தன் சொத்துக்களை விற்றோ மற்றவர்களிடம் கடன் பெற்றுக் கட்ட இம்மனுதாரர் மற்றவர்களுக்கு கடன் கொடுத்திருப்பார் என்றும் மேற்படி வரவு செலவுகளை தனது வருமான வரியில் கூட்ட வேண்டிய அவசியமில்லை என்றும், எனவே இவ்வழக்கை காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்று எந்தவித முகாந்திரமும் இன்றி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு மேற்படி மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்களும் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

**3. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மீள் திறப்பு மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே ஆகும் ?**

(03.01) இம்மனுவின் அசல் வழக்கானது கடந்த 18.01.2019 ம் தேதியன்று நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு STC No.05/2019 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

(03.02) இந்நிலையில், மனுதாரர் மேற்படி வழக்கு கடந்த 28.09.2022 ஆம் தேதியில் புகார்தாரர் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் 2016-2017 ஆம் வருட வருமானம் எவ்வளவு என்றாலும் அதற்காக புகார்தாரர் வருமான வரி செலுத்துகிறாரா என்றால் தான் செலுத்துவதாக கூறியதன் பேரில் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை வருமான வரியில்

குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை குறித்து எதிரி தரப்பில் மேற்படி புகார்தாரரை விசாரிக்க வேண்டியுள்ளது என்றும், மேற்படி புகார்தாரரை நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரணை செய்ய இவ்வழக்கை மீள் திறப்பு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(03.03) இந்நிலையில் வழக்காவணங்களைப் பரிசீலிக்கையில் எதிர்மனுதாரர்/புகார்தாரரின் தரப்பில் எழுத்து மூலமான வாதுரை ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிற நிலையில், ஏற்கனவே இம்மனுதாரர் வங்கி மேலாளரை அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்து Crl.M.P. No.3893/2023 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு மேற்படி மனுவானது இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது.

(03.04) இந்நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்/புகார்தாரரால் கடந்த 2019 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு கோப்புக்கு எடுக்கப்பட்டு நாளது தேதி வரை வழக்கு நடைபெற்று வருகிறது என்று முன்மொழியப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கானது கடந்த 18.01.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் தற்போது வாதுரைக்காக நிலுவையில் உள்ள நிலையில் இம்மனுவானது எதிரியான இம்மனுதாரால் கடந்த 20.01.2026 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(03.05) மேலும் புகார்தாரர் தனது முதல் விசாரணையை கடந்த 22.08.2019 ஆம் தேதி பதிவு செய்துள்ளார், மனுதாரர்/எதிரி தரப்பில் கடந்த 28.09.2022, 13.03.2023, 02.05.2023 ஆகிய தேதிகளில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது என்று தனது எதிருரையில் கூறியுள்ள நிலையில், இம்மனுவில் எதிரியானவர் எதிர்மனுதாரர்/புகார்தாரரை அழைத்து கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை வருமான வரி கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று மனுதாரர்/எதிரியானவர் கோரியுள்ள நிலையில் இவ்வழக்கின்

எதிர்மனுதாரர்/புகார்தாரரை 22.08.2019 ஆம் தேதியன்று முதல் விசாரணையும், 28.09.2022, 13.03.2023 மற்றும் 02.05.2023 ஆகிய தேதிகளில் மூன்று முறை சுமார் 30 பாராக்களாக இம்மனுதாரர் தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(03.06) மேலும் எதிர்மனுதாரர்/புகார்தாரரானவர் தான் தன் சொத்துக்களை விற்றோ மற்றவர்களிடம் கடன் பெற்றுக் கட்ட இம்மனுதாரர் மற்றவர்களுக்கு கடன் கொடுத்திருப்பார் என்றும் மேற்படி வரவு செலவுகளை தனது வருமான வரியில் கூட்ட வேண்டிய அவசியமில்லை என்றும், எனவே இவ்வழக்கை காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்று எந்தவித முகாந்திரமும் இன்றி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எதிருரை தாக்கல் செய்துள்ள நிலையில் புகார்தாரரின் 28.09.2022 ஆம் தேதிய இம்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் 4 வது பேராவில் " என்னுடைய மருத்துவ தொழிலில் 2016–2018 வரையான காலக்கட்டத்தில் எனது வருமானம் எவ்வளவு என்றாலும் அதற்காக நான் எவ்வளவு வருமான வரி செலுத்தியுள்ளேள் என்றாலும் நான் எனது வருமான வரி கணக்கை பார்த்தால் தான் தாக்கல் செய்ய முடியும் " என்று கூறியுள்ள நிலையில், இம்மனுதாரர் தரப்பில் புகார்தாரரிடம் வருமான வரி சம்பந்தமான கேள்விகள் ஏற்கனவே கேட்கப்பட்டுள்ளது தெரியவருகிற நிலையில், மேற்படி எதிர்மனுதாரரை 3 முறை செய்யப்பட்ட குறுக்கு விசாரணையின் போதே புகார்தாரரிடம் கடன் தொகையை வருமான வரி என்பது குறித்து கேள்விகள் எழுப்பியிருக்க போதுமான வாய்ப்பிருந்த நிலையில் அந்த சமயத்தில் இது குறித்து கேட்கப்படாமல் தற்போது மனுதாரரால் தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்கும் வகையில் இல்லை. மேலும் மனுதாரர் முன்னெச்சரிக்கையாக கவனத்துடன் செயல்பட்டும் தவறப்பட்டுள்ளது என்பதை பொறுத்து முன்மொழியப்படவில்லை.

(03.07) எனவே இவ்வழக்கான கடந்த 2019 ஆம் ஆண்டிலிருந்து சுமார் 07 வருடங்களாக நிலுவையில் இருந்து வருகிறது என்பதைக் கருத்திற்கொண்டும், அசல் வழக்கின் புகார்தாரரை இம்மனுதாரர் தரப்பில் ஏற்கனவே மூன்று முறை குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது என்பதைக் கருத்திற் கொண்டும், எதிரிக்கு இந்நீதிமன்றத்தால் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதைக் கருத்திற் கொண்டும் இம்னுவானது தள்ளுபடி செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**(03.06) இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.05 22:17:32 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.